




**We Shine Academy™**

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## மார்ச் - 2020

*We Are Here..!! To Guide You..!!*






# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## மார்ச் - 17.03.2020


Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- நியமனங்கள்









We Shine Academy

# தமிழக நிகழ்வுகள்

- **நாமக்கல் மாவட்டம், பரமத்தி** வட்டார ஒருங்கிணைந்த **குழந்தைகள் வளர்ச்சி திட்டப் பணிகள்** சார்பில், ஊட்டச்சத்து தொடர்பான நிகழ்வானது **இரண்டு வாரங்களாக நடைபெற்று** வருகிறது.
  - இதில், **குழந்தை வளர்ச்சியின் நாள்களை தங்கமான ஆயிரம் நாள்கள்** என வலியுறுத்தப்படுகிறது. இந்த நாள்களில் குழந்தை கருவுற்றது முதல் ஆயிரம் நாள்கள் வரை குழந்தைகளுக்கு தேவையான ஊட்டச் சத்துக்களை அவர்களின் வளர்ச்சிக்கேற்ப படிப்படியாக வழங்க வேண்டும் என்பதனை வலியுறுத்தி, இந்த நிகழ்வானது நடைபெற்றது.
  - **செய்தி துளிகள் :**
    - பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனில் அக்கறைகொண்டு 1975-ம் ஆண்டு அக்டோபர் 2-ம் தேதி காந்தி ஜெயந்தி அன்று துவங்கப்பட்டு கடந்த 42 ஆண்டுகளாக தாய்சேய் நலன் மற்றும் மேம்பாட்டுக்கு அரும்பணியாற்றி வருவதுதான் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம்.

- **நாகை மாவட்டம், வேதாரண்யம்** அருகேயுள்ள **கோடியக்கரையில் வன உயிரின பாதுகாப்பு சரணாலயமாக** உள்ளது. நிகழாண்டுக்கான கணக்கெடுப்பு பணி மார்ச் 14, 15 நடைபெற்றது.
  - இதில் கஜா பாதிப்பிற்கு பிறகு 2018-2019-ஆம் ஆண்டில் 681

ஆக இருந்த வெளிமான் இனத்தின் எண்ணிக்கையில் சீரான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் 54 என்ற எண்ணிக்கையில் இருந்த புள்ளிமான்களுடன் தஞ்சை சிவகங்கை பூங்காவில் இருந்து புதிய வரவாக வந்த 43 மான்களுடன் மொத்தம் 122-ஆக அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டில் **47ஆக இருந்த குதிரைகள் 197ஆக உயர்ந்துள்ளன.**

- **செய்தி துளிகள் :**
  - 2014-15-ல் 1,527 ஆக இருந்த பழந்தின்னி வௌவால்கள் கடந்த சில ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புகளில் பதிவாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- முதல்-அமைச்சர் கோப்பைக்கான **மாநில அளவிலான கபடி போட்டி** 3 நாட்கள் **மதுரை தமுக்கம் மைதானத்தில்** நடந்தது.
  - **ஆண்கள் பிரிவில்** லீக் ஆட்டங்கள் முடிவில் சேலம், கரூர், கன்னியாகுமரி அணிகள் தலா 2 வெற்றி, ஒரு தோல்வி கண்டு சமநிலை வகித்தன. போட்டியில் பெற்ற புள்ளிகள் வித்தியாசத்தின் அடிப்படையில் **சேலம் அணி சாம்பியன் பட்டத்தையும்**, கரூர் அணி 2-வது இடத்தையும், கன்னியாகுமரி அணி 3-வது இடத்தையும் பெற்றன.
  - **செய்தி துளிகள்:**

- **பெண்கள் பிரிவில்** லீக் ஆட்டம் முடிவில் **திண்டுக்கல் அணி 3 வெற்றியுடன் முதலிடத்தை** பிடித்தது. கோவை, சென்னை அணிகள் ஒரு வெற்றி, 2 தோல்வியுடன் சமநிலை வகித்தன. போட்டியில் எடுத்த புள்ளிகள் வித்தியாசத்தில் கோவை அணி 2-வது இடம் பெற்றது. சென்னை அணி 3-வது இடத்துக்கு தள்ளப்பட்டது.

- ஆல் **இங்கிலாந்து பேட்மின்டன் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில்,** நம்பர் 1 வீராங்கனை சென் யூ பெய்யுடன் டாய் ட்ஸு யிங் மோதினார்.
  - 21-19, 21-15 என்ற நேர் செட் கணக்கில் **டாய் ட்ஸு யிங் வெற்றி** பெற்று **தங்கப்பதக்கத்தை** வென்றார். இதனால் அவர் சாம்பியன் பட்டத்தை வென்றார்.
  - **செய்தி துளிகள்:**
    - ஆல் இங்கிலாந்து பேட்மின்டன் தொடர், பேட்மின்டனில் மிகவும் உயரிய, கவுரவமிக்கதாக கருதப்படுகின்றது.
    - இந்த போட்டிக்கான மொத்த பரிசுத்தொகை ரூ.8 கோடியே 14 லட்சம் ஆகும். வாகை சூடும் வீரர், வீராங்கனை தலா ரூ.57 லட்சத்தை பரிசாக பெறுவார்கள்.

## நியமனமங்கள்

- **மாநிலங்களவை நியமன உறுப்பினராக** உச்சநீதிமன்ற முன்னாள்

தலைமை நீதிபதி **ரஞ்சன் கோகோய்** மார்ச் 16ஆம் தேதி நியமிக்கப்பட்டார். குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், அவரை மாநிலங்களவை நியமன எம்.பி.யாக நியமித்தார்.

- அரசியல்சாசன சட்டத்தின் 80-ஆவது சட்டப் பிரிவின்படி, மாநிலங்களவை நியமன உறுப்பினராக ரஞ்சன் கோகோயை குடியரசுத் தலைவர் நியமித்துள்ளார். மூத்த வழக்குரைஞர் கே.டி.எஸ். துளசி பதவிக்காலம் நிறைவு பெற்றதை அடுத்து இந்த நியமனம் நடைபெற்றுள்ளது.
- **செய்தி துளிகள் :**
  - இதற்கு முன்பு உச்சநீதிமன்ற நீதிபதியாக இருந்தவர்களில் ரங்கநாத் மிஸ்ரா, காங்கிரஸ் கட்சியில் இணைந்து மாநிலங்களவை எம்.பி.யாக (1998-2004) இருந்தார்.
  - உச்சநீதிமன்றத்தின் 40-ஆவது தலைமை நீதிபதியாக இருந்த பி.சதாசிவம், பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசால் கேரள ஆளுநராக கடந்த 2014-ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார்

## திருக்குறள்

**குறள் : 140**

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : இல்லறவியல்

குறள் அதிகாரம் : ஒழுக்கமுடைமை

**உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்**

**கல்லார் அறிவிலா தார்.**

**விளக்கம்:** அறிவு ஒழுக்கங்களால் சிறந்தவர்களோடு ஒத்து நடத்தல் வேண்டும். அவ்வாறு நடக்காதவர் பல நூல்களைக் கற்றாராயினும் அறிவில்லாதவர்களேயாவர்.